"சுதந்திர இந்தியா @ 75:
நேர்மையுடனான தற்சார்பு"

மனித வள மேலாண்மைத் (ஏ)துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009.
பிலவ, பங்குனி - 30,
திருவள்ளுவர் ஆண்டு 2053.

கடித எண்.29620/ஏ1/2019-03, நாள் 13.04.2022

அனுப்புநர்
திருமதி. மைதிலி K. ராஜேந்திரன், இ.ஆ.ப.,
அரசு செயலாளர்.

பெறுநர்
அனைத்து அரசு செயலாளர்கள், சென்னை-600 009.
தலைமைச் செயலகத்திலுள்ள அனைத்துத் துறைகள்,
சென்னை-600 009.
மாவட்ட ஆட்சியர்கள் / மாவட்ட நீதிபதிகள்/
(மாவட்ட நிருவாக) நடுவர்கள் உள்ளிட்ட அனைத்து
துறைத் தலைவர்கள்,
செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்,
சென்னை - 600 003.
தலைமைப் பதிவாளர், சென்னை உயர்நீதிமன்றம், சென்னை -104.
பதிவாளர், சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை, மதுரை.

ஐயா / அம்மையீர்,

பொருள்: நடத்தை விதிகள் - அரசுப் பணியாளர்களின் இருதுணை மணம் - துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கையுடன் கூடுதலாக குற்றவியல் வழக்கு பதிவு செய்தல் - வழிகாட்டுதல்கள் - வெளியிடப்படுகிறது.

பார்வை: நீதிப்பேராணை எண். W.P.(MD).No.16082 /2014-ல் மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையின் ஆணை நாள் 23.07.2019.

******

தமிழ்நாடு மாநிலத்தின் அரசு அலுவலகங்களில் குடிமைப்பணிகள் மற்றும் பணியிடங்களில் நியமனம் செய்யப்படும் அரசுப் பணியாளர்கள், அவர்கள் பணியிலிருப்பினும், விடுப்பிலிருப்பினும் அல்லது அயற்பணியில் இருப்பினும், தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு அரசுப்பணியாளர் நடத்தை விதிகளுக்கு உட்பட்டவர்களாவர்.

2. இந்திய தண்டனைச் சட்டக் கோவையின் ( சட்டம் 45/ 1860) 494 ஆம் பிரிவின்படி, கணவன் அல்லது மனைவி உயிருடன் இருக்கும் நிலையில், அவர்கள் செய்துகொள்ளும் மற்றொரு திருமணம் செல்திறனற்றதாவதுடன், அவர்கள் தண்டனைக்குட்பட்டவர்கள் ஆவர்.

(த.பி.பா)

அத்தகைய குற்றம் புரிவது, 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் (மத்திய சட்டம் 2/ 1974) 198-ஆம் பிரிவில் அடங்கியுள்ள விதிகளின்படி, தண்டனைக்குரிய குற்றமாக கருதப்படும்.

3. 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப்பணியாளர் நடத்தை விதிகளின், 19 ஆம் பிரிவின்படி கணவன் அல்லது மனைவி உயிருடன் இருக்கும்போது எந்தவொரு அரசுப்பணியாளரும் மற்றொரு திருமணம் புரியவோ அல்லது மற்றொரு திருமண பந்தத்தில் ஈடுபடக் கூடாது. மேற்சொன்ன விதிகளை மீறிய எந்தவொரு செயலும், தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகளின்படி, துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்பட்டதாகும்.

4. 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஓய்வூதிய விதிகளின், 49 (12)-ஆம் விதியின்படி, அரசுப்பணியாளர்கள் ஓராண்டு பணி நிறைவுற்றவுடன், மேற்சொன்ன விதிகளில் இணைக்கப்பட்டுள்ள படிவம் 3-இல் அவரது குடும்ப விவரங்களை அளித்தல் வேண்டும். அரசுப்பணியாளருடன் தொடர்பான "குடும்பம்" என்பதற்கான விளக்கம், விதி 49ஆம் பிரிவைச் சேர்ந்த (13) ஆம் உட்பிரிவின் (b) பகுதியில் வரையறுக்கப்பட்டுள்ளது.

5. 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் நடத்தை விதிகளின், 19 ஆம் விதியின்படி, அரசுப்பணியாளர் எவரும் அரசுக்கு சிக்கல் ஏற்படுத்தக்கூடிய அல்லது மதிப்புக்குறைவை ஏற்படுத்தக்கூடிய, சட்டத்துக்கு புறம்பான ஒழுக்கக்கேடான எச்செயலிலும் ஈடுபடக்கூடாது என்றுள்ள நிலையில், அரசுப்பணியாளரின் ஓய்வு அல்லது இறப்பிற்குப் பின்னரே இத்தகைய இருதுணை மணம் குறித்து உரிய அலுவலகத் தலைமைக்கு தெரிய வருகிறது. இது அரசுப்பணியாளரின் சட்டப்படியான வாழ்க்கைத் துணைக்கு அளிக்கப்படவேண்டிய ஓய்வூதியப் பயன்களை அளிப்பதில் இடையூறுகளை, இன்னல்களை ஏற்படுத்துகிறது.

6. பார்வையில் கண்ட சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையின் நீதிப்பேராணையில், ஏனையவற்றுக்கிடையே, பின்வருமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

"19.xxxxxxxxxxx

*ii. The Secretary to Government, Personnel and Administrative Reforms Department is directed to issue consolidated instructions / guidelines as well as the procedures to be followed. Accordingly, the names of the spouses in the respective service records of the public servants are to be entered into after ascertaining the genuinity of the same and after conducting proper verification in order to protect the interest of the legally wedded spouse of the public servants in the Government Department.*

*iii. The Secretary to Government, Personnel and Administrative Reforms Department is directed to enter a clause in the instructions by stating that in the event of identifying any misconduct or the offence of bigamous marriage or otherwise, as the case may be, departmental disciplinary proceedings will be instituted and a criminal case also will be registered under the provisions of the Indian Penal Code.*

(த.பி.பா)

7. அதன்படி, தொடர்புடைய விதிகளை, துறைத் தலைமை முழுமையாக நடைமுறைப்படுத்தவும், அரசுப் பணியாளர் சட்டப்படி திருமணம் செய்துகொண்ட வாழ்க்கைத் துணைவரின் நலனை காத்திடவும், அனைத்து தலைமைச் செயலகத்துறைகள் மற்றும் துறைத் தலைமைகளுக்கு பின்வரும் வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்படுகின்றன:-

(i) தொடர்புடைய அதிகாரிகள், 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஓய்வூதிய விதிகளில், 49-ஆம் விதியைச் சேர்ந்த துணை விதி (12) மற்றும் துணை விதி (13) இன்படி, அரசுப் பணியாளரின் குடும்ப விவரங்களை படிவம் 3-ல் பெறுவதுடன், முறையான சரிபார்ப்பினை மேற்கொள்வதன் வாயிலாக அதன் உண்மைத் தன்மையை உறுதிசெய்த பின்னர், அதன் விவரங்களை அரசுப்பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும்.

(ii) மேற்சொன்ன விதிகளின், 45-ஆம் விதியின் கீழ், இறப்பு பணிக்கொடையை பெறுவதற்கு நேர்விற்கேற்ப, 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஓய்வூதிய விதிகளின், 48ஆம் விதியின் கீழ், படிவம் 1 அல்லது படிவம் 2-இல் அரசுப் பணியாளர் நேமகம் (Nomination) வழங்கியதை தொடர்புடைய அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும்.

(iii) இவ்வாறு, 1978 ஆம் தமிழ்நாடு ஆண்டு ஓய்வூதிய விதிகளின் 48ஆம் விதியின் 5-ஆம் துணைவிதிக்கிணங்க, அரசுப்பணியாளர்கள் பணியில் சேரும்போது அல்லது திருமணத்திற்கு பின்னர் அல்லது புதிதாக அரசுப்பணியாளரால் செய்யப்பட்ட நேமகம் (Nomination) தொடர்பான ஆவணங்களின் உண்மைத்தன்மையை உறுதி செய்த பின்னர், அதனை பணிப்பதிவேட்டில் பதிவு செய்திட வேண்டும். இவற்றில் ஏதேனும் ஐயம் எழுமாயின், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய விசாரணை நடத்தி, பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டிய நேமகதாரர்கள் (Nominations) குறித்து முடிவு செய்ய வேண்டும்.

(iv) நேர்விற்கேற்ப, அரசுப்பணியாளரது இருதுணை மணம் அல்லது வேறு தவறான நடத்தை கண்டறியப்படுவதன் பேரில், 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் நடத்தை விதிகளில் 19-ஆம் விதிமீறலுக்காக, தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகளின்படி, துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

(v) மற்றொரு திருமணம் புரிந்த குற்றத்திற்காக, 1973-ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் (மத்திய சட்டம் 2/1974) 198-ஆம் பிரிவில் அடங்கியுள்ள விதிகளின்படி அதிகார எல்லைக்குட்பட்ட காவல் நிலையத்தில் அளிக்கப்படும் புகாரின்

(த.பி.பா)

அடிப்படையில், இந்திய தண்டனைச் சட்டத்தின் அத்தியாயம் XX-இன்படி, அத்தகைய அரசுப்பணியாளர் மீது, குற்றவியல் வழக்கு தொடர்வதற்கு உட்படுத்தப்படுவார், என்பதும் வலியுறுத்தப்படுகிறது.

8. அனைத்துத் தலைமைச் செயலகத் துறைகளும் அதனதன் நிருவாகக் கட்டுப்பாட்டில் உள்ள அலுவலகங்களுக்கு மேற்படி அறிவுறுத்தல்களைத், தவறாமல் பின்பற்றப்பட வேண்டும் என உரியவாறு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

தங்கள் உண்மையுள்ள,

அரசு செயலாளருக்காக